விங்கமுவ பிரதேச சபை - 2020

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வில்கமுவ பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் வில்கமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபை அலுவலக திருத்த வேலை 11 ஆம் கட்ட வேலைக்கு செலவிட்ட ரூபா.330,000 தொகை கடன்கொடுனரிலிருந்து விடுபட்டிருந்தது. | 2021 கணக்குகளினூடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டியமை. |
| (ii) | கடன்கொடுனரிற்காக மீளாய்வாண்டில் செலுத்திய தொகை கணக்கீட்டின் பிரகாரம் ரூபா.19,895,311 ஆன போதும் கடன்கொடுனர் கணக்கில் அது ரூபா.17,943,633 ஆக ரூபா.1,951,678 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2021 கணக்குகளினூடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டியமை. |
| (iii) | வேலை கடன்படுனர்களிற்காக மீளாய்வாண்டில் ரூபா.19,895,311 தொகை கிடைத்திருந்த போதும் கடன்படுனர் கணக்கில் கிடைத்த தொகையாக ரூபா.12,571,311 குறிப்பிட்டதில் வேலை கடன்படுனர் மீதி ரூபா.7,324,000 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2021 கணக்குகளினூடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டு ரூபா.500,000 கடன்கொடுனர் கொடுப்பனவு, முற்பண கொடுப்பனவாக குறிப்பிடப்பட்டிருந்தது. | 2021 கணக்குகளினூடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியமை. |
| (v) | கடந்த ஆண்டு கொள்வனவு செய்த ரூபா.650,000 பெறுமதியான அலுமினியம் நீர் பவுசர் அவ்வாண்டு மோடார் வாகனம் மற்றும் மாட்டு வண்டியினுள் கணக்கீடு செய்திருக்கையில் 2020 ஆண்டு மீண்டும் இயந்திரங்கள் மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 கணக்குகளினூடாக சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | கொள்வனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியமை. |
| (vi) | மீளாய்வாண்டில் கள களஞ்சியம், காகிதாதிகள் களஞ்சியம், இறுதி இருப்பு என்பவற்றை கணக்கிட்டு கணக்கீடு செய்யாது இருப்புக்களின் ஆரம்ப மீதி இறுதி மீதியா கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டியமை. |
| (vii) | கடன்படுனர்களிற்காக கிடைத்த ரூபா.1,670,000 ஆன தொகை நீதிமன்ற தண்டப்பண கிடைப்பனவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 கணக்குக்குகளினூடாக திருத்த நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டியமை. |
| (viii) | மீளாய்வாண்டு முத்திரைக் கட்டணத்திற்காக கிடைத்த ரூபா.106,500 தொகை வங்கி இணக்க கூற்றில் நேரடி வரவாக காட்டப்பட்டிருந்தது. | 2021 கணக்குக்குகளினூடாக திருத்த நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ix) | மீளாய்வாண்டு ரூபா 84,000 ஆன விஷேட முற்பண வழங்கல், ஊழியர் கடன் மீதியிற்கு சேர்க்கப்படாது, உப கட்டுநிதி கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 கணக்குக்குகளினூடாக திருத்த நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டியமை. |

**1.6.2 தொங்கல் கணக்கு**

நீண்ட காலமாக நிலவி வரும் ரூபா.1,501,545 பெறுமதியான தொங்கல் கணக்கு மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள |
|---|---|---|---|
| 1988 திசெம்பர் 17 இன் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1988 இன் 56 இலக்க தேசிய சுற்றாடல் (திருத்த) சட்டம் | வியாபார அனுமதிப் பத்திரம் உரித்தான வியாபார நிறுவனங்கள் பற்றிய கணிப்பீடொன்றை மேற்கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், 120 வியாபாரங்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு விடயத்தை ஏற்றுக் கொள்வதாகவும் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக இந் நடவடிக்கை விடுபட்ட போதும் தற்போது விடய நடவடிக்கைகள் நாளாதுவரையாக்கப்படுவதாக. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா.1,139,387 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா.12,559,960 ஆகும். இதற்கு பிரதான காரணமாக சம்பளம் மற்றும் படிகள் அதிகரித்தமை, மூலதன செலவு மற்றும் போக்குவரத்து செலவு அதிகரித்தமையும், சேவை மற்றும் வாடகை வருமானம் குறைந்தமை இந்த வித்தியாசத்திற்கு காரணமாக அமைவதாக அவதானிக்கப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் பொதுத் துறை நிலுவை ரூபா.143,292 உள்ளடங்களாக ரூபா.402,077 ஆன நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆதனத் தடை செய்து இந் நிலுவை பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவு பிதகாரம் நிலுவை வருமானத்தை அறிவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | 05 வருடங்களில் 05 வருடங்களிற்கு வீதவரி மதிப்பீடு செய்ய வேண்டிய போதும் 2011 ஆண்டு வீதவரி மதிப்பீட்டின் மீது வீதவரி அறவிட்டதன் காரணமாக சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இறுதி மதிப்பீட்டறிக்கை கிடைத்தவுடன் அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும். | சபைக்கு ஈட்டிக் கொள்ளக் கூடிய வருமானத்தை ஈட்டிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டு இறுதியளவில் கூட்டுத் தொகை ரூபா.847,708 ஆன நீர் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செலுத்தாத நீர் நுகர்வோர்களின் நீர் வழங்களை துண்டித்து தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக. | நிலுவை பணத்தை விரைவில் அறவிட வேண்டியமை. |

வாடகை

-------------

| | | |
|---|---|---|
| நீண்ட காலமாக பொது சந்தைகளில் 11 கடையறைகளின் வாடகை ரூபா.897,069 இற்கு மதிப்பிட்டிருந்த போதும் அதன் உரிமையை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்காததன் காரணமாக புதிய மதிப்பீட்டின் மீது குத்தகை வழங்கி சபைக்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | இக் கடையறைகளை ஒப்படைக்குமாறு கோரியுள்ள போதும் இது வரை ஒப்படைக்கவில்லை. மேலும், ஹெட்டிபொல நகரில் அனைத்து காணிகளிலும் இப் பிரச்சினை காணப்படுவதாக. | சபைக்கு ஈட்டிக் கொள்ளக் கூடிய வருமானத்தை ஈட்டிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

--------------------------------------

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நீண்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவரப்படும் கூட்டுத் தொகை ரூபா.910,704 ஆன கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளின் பெறுமதியை தீர்த்துக் கொள்ள மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சரிசெய்ய எதர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 10 திகதி சபை கெப் வண்டி லொரி வண்டியொன்றுடன் மோதி நிகழ்ந்த விபத்தில் ஏற்பட்டிருந்த நட்டம் நிதிப் பிரமாணம் 104(3) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் ரூபா.1,670,381 ஆனதுடன் விபத்து நிகழ்கின்ற சந்தர்பத்தில் கெப் வண்டி கடமை பயணமொன்றில் ஈடுபட்டிருந்ததற்கான விடயங்கள் உறுதியாகி இருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 104(4) இறுதி பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு பொறுப்பை உறுதி செய்து நட்டத்தை அறவிட்டிருக்கவில்லை. | நட்டத்தை அறவிட விசாரணை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி சபையின் 09 பதவிகளில் 24 வெற்றிடங்கள் காணப்பட்டன. | இவ் ஊழியர் வெற்றிடம் தொடர்பாக உயர் முகாமைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 சுற்றாடல் பிரச்சினை**

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 24 திகதிய உ.ஆ. ஆணையானரின் இலக்கம் 4/1/2020 கொண்ட சுற்றறிக்கையிற்கு முரனாக வில்கமுவ பிரதேச சபையினால் மீளாய்வாண்டு திரட்டிய மீள்சுழற்சி செய்யக்கூடிய 0.150 டொன் கழிவுப் பொருட்கள் திகம்பதஹ கவசிமா தொட்டிலிற்கு வழங்கப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை மூலம் அறிவூட்டிய போதும் நடைமுறையில் ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் அவை தொடர்பில் எடுக்க முடியுமான தீர்வொன்றாக சபை அங்கீகாரத்தின் கீழ் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சுற்றாடல் அனுமதிப்பத்திர காலம் முடிவடைந்திருந்த 04 வியாபாரங்களை மீண்டும் புதுப்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | 1988 இன் 56 இலக்க சுற்றாடல் சட்டம் பிரகாரம் செயற்படுத்த வேண்டியமை. |